**செய்தி வெளியீடு எண்:561** **நாள்: 29.08.2017**

<u>செய்தி வெளியீடு</u>

<u>திரு. அமல் ராஜ் அவர்களுக்கு மத்திய அரசு அர்ஜுனா விருது வழங்கியதையடுத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (29.8.2017) திரு. அமல் ராஜ் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:</u>

‘‘தமிழ்நாட்டைச் சார்ந்த தாங்கள், 2014 ஆம் ஆண்டு கிளாஸ்கோ காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், டேபிள் டென்னிஸ் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளதோடு, 2015 ஆம் ஆண்டு தேசிய விளையாட்டுப் போட்டியில் இரண்டு தங்கம் மற்றும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளீர்கள். தங்கள் சாதனைகளை மேலும் ஊக்குவிக்கும்வண்ணம் இந்திய அரசு அர்ஜுனா விருது வழங்கியதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பல உலக சாம்பியன்ஷிப் போட்டிகளிலும், ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியா சார்பாக கலந்து கொண்டு, தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த தங்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தாங்கள் மேன்மேலும் பல வெற்றிகளை பெற எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**
**நாள் : 29.8. 2017**